# அமர் சேவா சங்கம்

## – ஓர் ஆலமரம்!

சமூகத்திற்கு மிகத்தூய்மையான முறையில் சேவை செய்பவர் என்பதற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டாக திரு. S.ராமகிருஷ்ணன் அவர்களைக் குறிப்பிடலாம். தன் உடல் மிகக் கடுமையான பாதிப்புக்குள்ளாகியும், தன்னைச் சுற்றியுள்ள மாற்றுத் திறனாளிகளின் சமூகத்திற்கு இவர் செய்கின்ற அளவிற்கு சேவை செய்பவர்களை உலகளவில் காண்பதரிது.



அமர்சேவா சங்க நிகழ்ச்சி ஒன்றில் பள்ளிக்குழந்தைகள்.

திரு.இராமகிருஷ்ணன் அவர்கள் அமர்சேவா என்ற அமைப்பின் நிறுவனரும், தலைவருமாவார். ஒரு மனிதனுள் அடங்கிக் கிடக்கும் எண்ணம் நல்லவையாகவும், நேர்மையாகவும் இருந்து அதில் தைரியமும், உற்சாகமும் இணைந்து அத்துடன் நாணயமும், பணிவும் சேர்ந்தால் சாதிப்பதற்கு உடல் ஒரு பொருட்டே அல்ல என்பதற்கு, இவரே சான்று.

ஒரு பொறியியல் மாணவராக இருந்தபோது கடற்படையில் சேர்வதற்கு நடந்த செயற்பயிற்சியின் போது ஏற்பட்ட விபத்து தான் இவருடைய வாழ்க்கையையும், எதிர்கால கனவையும் சுக்குநூறாய் தகர்த்தெறிந்தது. அந்த விபத்தின் காரணமாக முழுமையான



தண்டுவட பாதிப்பால் இவருடைய முழு உடலும் செயலிழந்தது. இவருக்கு ஏற்பட்டிருப்பது அதிகப்பட்ச தண்டுவட பாதிப்பாகும். கழுத்தைக் கூட இவருடைய விருப்பத்திற்கேற்ப அசைக்க முடியாத நிலை. உடல் இயக்க கட்டுப்பாடுகளும், உணர்வுகளும் அற்ற போதும் தனது தேவை ஒவ்வொன்றுக்கும் செய்ய வேண்டிய சிறு சிறு செயல்கள் ஒவ்வொன்றிற்கும், தனது உடல் அசைவு ஒவ்வொன் - றிற்கும் பிறரின் உதவியை நாட வேண்டிய துர்பாக்கிய நிலை. மேலும், ஒவ்வொரு நொடிப் பொழுதிலும் இவர் சந்திக்கும் எண்ணற்ற தடங்கல்களும், தடைகளும் ஏராளம், ஏராளம்!

**<u>அழகாய் விரியும்</u>**

கனவுகள் கல்யாணம்
காயங்கள் மாறலாம்
மனதின் வலிமை
குறையாகுமோ?
தடைகளாய் வரும்
ஒவ்வொரு கல்லையும்
சிலையாய் செதுக்கி
வாழ்ந்து பார்!
வாழ்க்கை பாதை!
அழகாய் விரியும்!

– ஷோபனா, மதுரை.

தனது மூளையின் வலிமையும், தனக்கே உரிய தொடர்பு கொள்ளும் திறனும் இவரை ஒரு மாமனிதனாக உருவெடுக்க வைத்திருக்கிறது. தனக்கு மறுவாழ்வு பயிற்சி கொடுத்த டாக்டர். அமர்ஜித் சிங் அவர்களின் பெயரைச் சூட்டி செயல்பட்டு வரும் அமர்சேவா சங்கம், இன்று பலதரப்பட்ட மாற்றுத் திறனாளிகளின் வளர் நிலமாக ஆயக் குடியைச் சுற்றியுள்ள மக்களுக்கு இருந்து வருகிறது.

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், ஆயக்குடி என்னும் கிராமத்தில் வேரூன்றி இருக்கும் இந்த அமைப்பு, இன்று சேவை செய்ய நினைக்கும் ஒவ்வொருவரும் காண விரும்பும் ஒளிரும் அடையாளம் ஆகும். தகவல் தொடர்புகளும், இணைப்புகளும் அரிதாக இருந்த காலத்திலேயே இவ்வளவு சிறப்பான நிறுவனத்தை துவங்கி வழி நடத்தி வந்திருப்பது இவருடைய சாதனையின் பெரிய மைல்கல் எனலாம்.

அக்கம்பக்கத்து ஏழைக்குழந்தைகளுக்கு தன்னிடமிருந்த கல்வியறிவை புகட்ட ஆரம்பித்த திண்ணைப் பாடம், படிப்படியாய் வளர்ந்து, 1981-ல் இராமகிருஷ்ணன் தாய் தந்தையர் பெயரில் 'சிவசரஸ்வதி வித்யாலயா' என்று உதயமாகி, பின்னர் அதுவே அமர்சேவா சங்கமாக உருவெடுத்தது. சுமார் 10 குழந்தைகளோடு

ஆரம்பித்த சங்கம் இன்று 600 குழந்தைகளுக்கும் மேலான மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி செய்து வருகின்றது. சுமார் 2500 மாற்றுத்திறனாளிகளுக்கு நேரடியாக கல்வி, தொழிற்கல்வி, மருத்துவம் போன்ற உதவிகளைச் செய்து வருகிறது.

இந்த சங்கத்தில் முதுகுத்தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை, உடற்பயிற்சி மையம், மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கும், இளம்பிள்ளைவாதத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கும், சாதாரண பிள்ளைகளுக்கும் தனித்தனி பள்ளிகள். மாற்றுத்திறனாளிகள் மற்றும் சாதாரண ஆட்களுக்கு தொழிற்கல்விகள் (தையற்பயிற்சி முதல் கணினி பயிற்சி வரை) இங்கு தங்கி படிக்கும் அனைவருக்கும் உணவும், உறைவிடமும் கொடுத்து, அத்துடன் உள்ளத்தை உறுதியாக்கும் நம்பிக்கையையும் கொடுத்து ஒப்பில்லா பணிகளைச் செய்து வருகின்றனர்.

'வாழ்வது சேவைக்கே' என்ற கொள்கையைக் கொண்டு அமர் சேவா சங்கம் செயல்பட்டு வருகிறது. விருந்தோம்பல் என்பதற்கு அமர்சேவா சங்கம் புதிய வழியைக் காட்டி வருகிறது.

அமர்சேவா சங்கத்தின் சாதனைகளை அறிய www.amarseva.org என்ற வலைதளத்தில் காணலாம். தமிழ்நாட்டின் மதுரை (அ) திருநெல்வேலி பக்கம் செல்பவர்கள் சில மணி நேரம் செலவழித்தால் அமர்சேவா சங்கம் சென்று, அவர்கள் செய்துள்ள மாற்றத்தையும், அதன் விளைவுகளையும் நேரில் காணலாம். அது உங்கள் வாழ்க்கையின் செயல்பாடுகளில் ஒரு நல்ல முதலீடாகவே அமையும்.

**– மின்னூர் மகாதேவன்.**

பாட்டி : ஏய்! அங்க பாரு உங்க வாத்தியாரு
வர்றாரு. ஒடம்பு சரியில்லன்னு
தான லீவு போட்ட, போய் ஒளிஞ்சிக்கோ...

பேரன் : ஏய் கெழவி! நீ மண்டைய போட்டதா தான்
சொல்லி லீவு போட்டேன்,
நீ போய் ஒளிஞ்சிக்கோ ...



பாட்டி : ????????????????

**ஜெயகுமார், வேலூர்.**